* LIBRARY
30 NOV 2010
Eastern University, Sri Lanka

# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

மூன்றாம் வருட பொதுக்கலைமாணித் தேர்வு - 2007/2008 (வெளிவாரி)
(செப்ரம்பர்/ஒக்டோபர் 2010)

## GEO 302 தென்னாசிய மற்றும் தூர கிழக்காசியப் புவியியல்

நேரம் : 03 மணித்தியாலங்கள்

எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடையளிக்குக.

எழுத்து தெளிவில்லாதவிடத்து புள்ளிகள் குறைக்கப்படும்.

தென்னாசிய புறவரிப்படம் வழங்கப்படும்.

---

01. தென்னாசியாவின் பிரதான தரைத்தோற்ற அம்சங்களை புறவரிப்படம் ஒன்றில் வரைந்து காட்டி இத்தரைத்தோற்ற இயல்புகளை புவிச்சரிதவியலுடன் தொடர்புபடுத்தி விளக்குக.

02. இந்தியாவின் இடம் சார்ந்த காலநிலை வேறுபாடுகளுக்கு தென்னாசியப் பிராந்தியத்தின் அமைவிடமும் தரைத்தோற்ற அம்சங்களும் எவ்வகையில் செல்வாக்குச் செலுத்துகின்றன என்பதனை உதாரணங்கள் தந்து விளக்குக.

03. “புவிச்சரிதவியல் மற்றும் நில ரீதியாக இலங்கை முன்பு இந்தியாவுடன் இணைந்து காணப்பட்டதாயினும் பின்பு பிளவுபட்டு ஒரு தனித்தீவாக அமைந்துள்ளது.” இக்கூற்றின் உண்மைத் தன்மையினை தகுந்த ஆதாரங்கள் காட்டி விளக்குக.

04. “தென்னாசியாவின் பொருளாதார வளர்ச்சியில் பெண்களின் பங்களிப்பு அண்மைக்காலமாக கணிசமான அளவு அதிகரித்து வருகின்றது.” இக்கூற்றினை நீர் ஏற்றுக்கொள்வீரா? யாதாயினும் இரு தென்னாசிய நாடுகளை உதாரணமாகக் கொண்டு உமது கருத்துக்களை நியாயப்படுத்துக.

05. “இன்றைய உலக அரசியலில் இலங்கையின் முக்கியத்துவம்” என்பது பற்றி புவியியல் ரீதியான இட அமைவுடன் தொடர்புபடுத்தி ஓர் விரிவான கட்டுரை வரைக.

06. தூர கிழக்காசிய நாடுகளில் காணப்படும் துரித பொருளாதார வளர்ச்சிக்கு அடிப்படையாக அமையும் காரணிகளைக் குறிப்பிட்டு, அவை எவ்வகையில் அந்நாடுகளின் முன்னேற்றத்திற்கு துணை புரிகின்றன என்பதை உதாரணங்களுடன் விளக்குக.

*********